[1979 மார்ச் 10

உதகையில் பால் பவுடர் தொழிற்சாலை.

*வினா எண். 333—திரு. கே. உச்சி : மாண்புமிகு கிராமத் தொழில் துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், உதகையில் ஒரு பால் பவுடர் தொழிற்சாலை ஏற்படுத்த அரசு திட்டமிட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அந்தத் திட்டத்திற்கு ஆகும் செலவு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) உதகையில் பால் பவுடர் தொழிற்சாலை அமைக்கும் செயற்குறிப்பு மீதான அரசின் முடிவு தக்க ஆதாரக் குறிப்புகள் கிடைக்கும் வரை தள்ளிப் போடப்பட்டுள்ளது. இது சம்பந்தமான கருத்துரு ஊட்டி மாவட்ட ஆட்சியாளரிடமிருந்து தற்பொழுது பெறப் பட்டு அரசின் ஆய்வில் உள்ளது.

(ஆ) மாவட்ட ஆட்சியாளரின் கருத்துருப்படி இத்திட்டத்தின் கீழ் ஆகும் செலவு ரூ. 70 இலட்சம் என மதிப்பிடப் பட்டுள்ளது.

லால்பேட்டையில் மருத்துவ மனை.

*வினா எண். 334—திரு. எ. இராமலிங்கம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தென்னாற்காடு மாவட்டம் லால்பேட்டை பேரூராட்சியில் அரசு பொது மருத்துவமனை அமைக்க உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் :

இல்லை.

ஆரணி மருத்துவ மனை.

*வினா எண். 335—திரு. வீ. அர்ச்சுனன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆரணியிலுள்ள அரசு மருத்துவ மனையில் படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகரித்து, விஸ்தரிக்கும் உத்தேசம் உள்ளதா ?

---

* உடுக்குறியிட்ட வினாக்கள் எண். 333 முதல் 337வரை விதி 35 (4)-ன் கீழ் நடவடிக்கைக்குறிப்பில் அச்சிடப் பெற்றுள்ளன.